DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 57 of 2024** |
| **Deposition of witness for** | **:** | **PW- 01 (L.W.01)** |
| **Name** | **:** | சீனிவாசன் |
| **Father's Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

03.06.2026:

**முதல் விசாரணை** :

நான் தற்பொழுது பல்லடம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் மஞ்சூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 05.12.2026 அன்று எனக்கு கிடைக்கப்பட்ட தகவலின் பேரில் சிறப்பு உதவி ஆய்வாளர் செல்வன் மற்றும் 2ஆம் நிலை காவலர் அபுபக்கர் சித்திக் ஆகியோருடன் சென்று மஞ்சூர் ஓணிகண்டியில் MMM Store கடையில் சோதனை செய்தபோது அதன் உரிமையாளரான எதிரி தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட Hans Chaap என்று

பெயரிடப்பட்ட 15 பாக்கட் உள்ள 23 பாலிதின் கவர், கூல்லிப் என்று பெயரிடப்பட்ட 9 பாக்கட் உள்ள பாலிதின் கவர் 2, விமல் பான்மசாலா என்று பெயரிடப்பட்ட 30 பாக்கட் உள்ள பாலிதின் கவர்கள் 16, V1 Tobacco என்று பெயரிடப்பட்ட 30 பாக்கட் உள்ள பாலிதின் கவர் 18 ஆகியவற்றை அவர் கடையில் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே மேற்படி குற்றத்திற்காக எதிரியை காலை 9.00 மணிக்கு கைது செய்தேன். அன்று காலை 9.15 மணிக்கு மேற்படி பொருட்களை சாட்சிகள் செல்வன், அபுபக்கர் சித்திக் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். அந்த மகசர் **அ.சா.ஆ–1,** பிறகு எதிரி மற்றும் கைப்பற்றிய தடயங்களுடன் நிலையம் திரும்பி மேற்படி காவல் நிலைய குற்ற எண்125/2023ல் பிரிவுகள் 20(2) COTPA Act மற்றும் பிரிவு 328 இ.த.ச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ–2**, பிறகு கைப்பற்றிய தடயங்களையும் படிவம் எண் 91 மூலம் உதகை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். படிவம் எண் 91 **அ.சா.ஆ–3**, எதிரியை ஆய்வாளர் மேற்படி நீதிமன்றத்தில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். Hans Chaap என்று பெயரிடப்பட்ட 15 பாக்கட் உள்ள 23 பாலிதின் கவர் **அ.சா.பொ–1 வரிசை**, கூல்லிப் என்று பெயரிடப்பட்ட 9 பாக்கட் உள்ள பாலிதின் கவர் 2 **அ.சா.பொ–2 வரிசை,** விமல் பான்மசாலா என்று பெயரிடப்பட்ட 30 பாக்கட் உள்ள பாலிதின் கவர்கள் 16 **அ.சா.பொ–3 வரிசை,** V1 Tobacco

என்று பெயரிடப்பட்ட 30 பாக்கட் உள்ள பாலிதின் கவர் 18 **அ.சா.பொ–4 வரிசை.** பிறகு கோப்பினை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** : இல்லை.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.06.03 16:02:43 +0530